செ.வெ.எண். 60/ஜூன் தேதி : 28.06.2016

**பத்திரிக்கைச் செய்தி**

# உலக போதை பொருட்கள் ஒழிப்பு தினம் 2016 விழிப்புணர்வு பேரணியை தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.





உலக போதை பொருட்கள் ஒழிப்பு தினம் 2016 விழிப்புணர்வு பேரணியை தருமபுரி அரசு கலைக்கல்லூரியில் இன்று (28.06.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்து பங்கேற்று போதை பொருட்களால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்களை வழங்கி செய்தியாளர்களிடத்தில் தெரிவித்ததாவது:-

உலக போதை மருந்து மற்றும் போதைப்பொருள் கடத்தல் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு போதை மருந்துகள் உபயோகிப்பதால் ஏற்படும் விளைவுகளை சுட்டிக்காட்டி போதை மருந்துக்கு அடிமைப்பட்டவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் உலக போதை பொருள் தின விழிப்புணர்வு பேரணி இன்று தருமபுரி அரசு கலைக்கல்லூரியில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இப்பேரணியில் தருமபுரி அரசு கலைக்கல்லூரி, அரசு மருத்துவக்கல்லூரி 2-ம் ஆண்டு மாணவ, மாணவிகள், பச்சமுத்து கல்லூரி, கொங்கு கலைக்கல்லூரி, பாப்பாரப்பட்டி உறுப்பு கல்லூரி, விஜய் வித்யாலயா மகளிர் கல்லூரி ஆகிய கல்லூரிகளுக்குட்பட்ட 2000-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் பங்கேற்று போதை பொருள் உபயோகிப்பதால் ஏற்படும் விளைவுகள் குறித்து போதை பொருளை ஒழிப்போம், வாழ்வை காப்போம், போதைப்பொருள் உடல் நலத்திற்கு கேடு போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி சென்றனர்.

இப்பேரணி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், இலக்கியம்பட்டி வழியாக தருமபுரி அரசு மருத்துவக்கல்லூரியை சென்றடைந்தது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர், உதவி ஆணையம் (ஆயம்) திருமதி. மல்லிகா, தனி துணை ஆட்சியர் (சிறப்புத்திட்டங்கள்) திரு. குப்புசாமி, உதவி இயக்குநர் (பஞ்சாயத்து) திரு. பழனிசாமி, தருமபுரி அரசு கலைக்கல்லூரி முதல்வர் (பொறுப்பு) திரு. கண்ணன், சுகாதார கல்வியாளர் மரு. தாமோதரன், உதவி பேராசிரியர் சமூக மருத்துவத்துறை மரு. கிருத்திகா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.